11th November 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது சர்க்கார் வேலை. தனிப் பட்ட பள்ளிகளில் பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர்களுக்கு இது பிரத்யேகமான வேலை. அதற்காகப் படி கொடுக்கப்படுகிறது. சர்க்கார் ஆசிரியர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தராக இருக்கிறார் கள். அந்த ஆசிரியர்கள் எந்த நேரத்தில் அவர்கள் வேலையைச் செய்ய வேண்டுமோ அந்த நேரத்தில் பரிட்சை நடத்தப்படுகிறது. அந்தப் பரிட்சையில் பொதுவாக மேற்பார்வை பார்த்தால் அது சர்க்கார் வேலையாக இருக்கிறது. பிரத்யேகமான வேலையாக அது இல்லை. அதற்காக தனியாகக் கொடுக்கப்படுவது இல்லை.

திரு. ஆர். வெங்கடாசலம்: வேறு தினங்களில் 'காம்பன்சேட்' செய்வதற்காக பள்ளி நடத்தப்படுகிறது. அதனால்தான் கேட்கப் படுகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது எனக்குத் தெரியாது. அப்படி இருந்தால் அந்த ஆசிரியர்கள் கேட்கலாம்.

Kanyakumari Devaswom Board

* 187 *Q.*—SRI M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the staff of the Kanyakumari Devaswom Board functioning under the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Act, 1959 are not paid pension; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) Except 35 employees who formerly belonged to the Devaswom department of the Ex-Travancore State Government and who were transferred to Kanyakumari Devaswom Board after the States Reorganisation, the remaining staff of the Kanyakumari Devaswom Board are not eligible for pension. The Kanyakumari Devaswom Board is not a Government department. It is a statutory body constituted under section 4 (1) of the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Act, 1959 (Madras Act 30 of 1959), subject to the general powers of superintendence, control and revision by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras. Hence the staff appointed by the Board are not Government servants and are not paid pension.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவர் அவர்களே, அந்த நிதிக்கு மேலாக பென்ஷன் வழங்க போர்டுக்கு அரசாங்கம் சிபாரிசு செய்ய முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் போர்டுக்கு சிபாரிசு செய்வது என்பதில்லை. அது போர்டு கவனிக்க வேண்டிய விஷயம்.